**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.26/2025** |
| Prosecution Witness : | **LW - 3 / PW - 3** |
| Name : கலிலூர்ரஹ்மான் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **24.10.2025**

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரிக்காக கு.வி.மு.ச 317 மனு ஏற்பு)**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆண்டிமடம் தாலுக்கா, சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2020 அன்று அதாவது வழக்கு சமயத்தில் நான் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியராக ஜெயங்கொண்டத்தில் பணிபுரிந்தேன். அன்றைய தினம் பகல் 11.30 மணியளவில் எங்கள் சங்க கூட்டம் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் நான் கலந்துகொண்டேன். 11.30 மணியளவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ரவிச்சந்திரன் என்பவர் எனக்கு போன் செய்து அலுவல் சாட்சியாக இருப்பதற்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு என்னை போகச் சொன்னார். அதன்படி நான் பகல் 12.30 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் சந்திரசேகர் என்பவரை சென்று பார்த்தேன். அப்போது அங்கு மற்றொரு அலுவல் சாட்சியான ராஜகோபால் துணை வட்டாட்சியர் அங்கு இருந்தார். DSP சார் என்னிடம் FIR Copy யையும் புகார் நகலையும் கொடுத்து படிக்க சொன்னார். நானும், ராஜகோபாலும் அவைகளை படித்து பார்த்தோம். புகார்தாரர் தர்மலிங்கம் என்பவரையும் எங்களிடம் அறிமுகம் செய்து வைத்தார். இந்த FIR லும் புகாரிலும் உள்ளவைகள் பற்றி தர்மலிங்கத்திடமும் கேட்டு

தெரிந்துகொள்ளும்படி என்னிடமும் ராஜகோபாலிடமும் DSP சொன்னார். அதன்படி நாங்கள் இருவரும் புகார்தாரரிடம் FIR–ல் உள்ளவையெல்லாம் உண்மைதான என்று கேட்டோம். அவரும் உண்மை என்று சொன்னார். பிறகு DSP சார் புகார்தாரரிடம் 10,000/– கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அந்த பணம் தட்கல் மூலமாக மின்இணைப்பு பெறுவதற்காக EB, AE தர்மலிங்கத்திடம் கேட்டதாக புகார்தாரர் தர்மலிங்கம் சொன்னார். புகார்தாரரிடம் அந்த 10,000/– பணத்தை ராஜகோபாலிடம் கொடுக்கும்படியும், அதை ராஜகோபால் எண்ணி பார்க்கும்படியும் DSP சொன்னார். ராஜகோபால் தன் இரு கைகளாலும் அந்த பணத்தை எண்ணி பார்த்து 20, ஐந்நூறு ரூபாய் தாள்கள் இருப்பதாக சொன்னார். அந்த ரூபாய் தாள்களின் எண்களை ராஜகோபால் சொல்ல DSP குறித்து கொண்டார். பின்னர் அங்கு இருந்த பெண் காவலர் ஒருவரிடம் இரண்டு டம்ளர்களில் சோடியம் கார்பனைட் கலந்த கரைசல் தயார் செய்ய DSP சொன்னார். அவரும் அவ்வாறே செய்தார். DSP சார் ராஜகோபாலிடம் அவரது வலது கையை முதலில் டம்ளரில் உள்ள சோடியம் கார்பனைட் கரைசலில் நனைக்க சொன்னார். அவரும் அவ்வாறே நனைத்தார். நீரின் நிறம் மாறவில்லை. அதே போல் மற்றொரு டம்ளரில் உள்ள கரைசலில் ராஜகோபாலின் இடது கையை DSP நனைக்க சொன்னார். அவரும் அவ்வாறே நனைத்தார். கரைசலின் நிறம் மாறவில்லை. DSP சார் பெண் காவலரிடம் பினாப்தலின் பவுடரை ரூபாய் தாள்கள் எல்லாவற்றிலும் தடவும்படி சொன்னார். அவரும் அவ்வாறே செய்தார். மீண்டும் ராஜகோபாலை பணத்தை எண்ணிப்பார்க்கும்படி DSP சொன்னார். ராஜகோபாலும் அந்த பணத்தை அவரது இரண்டு கைகளாலும் எண்ணிப்பார்த்தார். DSP பவுடர் தடவிய அந்த பணத்தை புகார்தாரரின் மேல் சட்டையின் இடது பாக்கெட்டில் வைக்கும்படி சொன்னார். அவரும் அவ்வாறே வைத்தார். அந்த சட்டை பையில் வேறு பொருட்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டார். பின்னர் ராஜகோபாலை சோடியம் கார்பனைட் கலந்த கரைசல் உள்ள ஒரு டம்ளரில் கையை DSP நனைக்க சொன்னார். ராஜகோபாலும் தனது வலது கையை நனைத்தார். அப்போது அந்த கரைசல் நிறம் இளஞ்சிகப்பு நிறமாக மாறியது. பிறகு ராஜகோபால் DSP சொன்னவாறு தனது இடது கையை மற்றொரு கரைசலில் நனைத்தார். அப்போது அந்த கரைசல் நிறமும் இளஞ்சிகப்பு நிறமாக

மாறியது. அப்போது **DSP** சோடியம் கார்பனைட் கலந்த கரைசலில் பினாப்தலின் பவுடர் பட்ட கையை நனைத்தால் நிறம் மாறும் என்று என்னிடமும், புகார்தாரர், மற்றொரு சாட்சி ராஜகோபால் ஆகியோர்களிடம் விளக்கம் சொன்னார். பின்பு **DSP** சார் பெண் காவலரை அழைத்து அந்த கரைசலை **Dispose** செய்ய சொன்னார். ராஜகோபாலை கையை சோப்பு போட்டு கழுவும்படி சொன்னார். அவரும் கையை கழுவினார். பிறகு **DSP** ஒரு ஒப்படைப்பு மகசர் தயார் செய்தார். அதில் **DSP,** நான், மற்றொரு அலுவல் சாட்சி ராஜகோபால் மற்றும் புகார்தாரர் ஆகியோர்கள் கையெழுத்து செய்தோம். அதில் ரூபாய் தாள்களின் எண்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த தாள்கள் இருபது **500/–** ரூபாய் தாள்கள். அந்த **500** ரூபாய் தாள்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது ஆகும். (அது ஏற்கனவே சா.பொ.**1** ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.) ஒப்படைப்பு மகசர் அ.த.சா.ஆ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னர் மாலை 03.30 மணியளவில் நானும், DSP சாரும், ராஜகோபாலும், புகார்தாரர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் அரியலூரிருந்து இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு சுத்தமல்லி to T.பழூர் ரோட்டில் உள்ள EB அலுவலகத்திற்கு 100 அடிக்கு முன்பு வாகனங்களை நிறுத்தி விட்டு DSP சார் என்னிடமும், புகார்தாரரிடமும் EB அலுவலகத்திற்கு சென்று என்ன செய்ய வேண்டும் என்று மீண்டும் ஞாபகப்படுத்தினார். அதன் பிறகு நானும், புகார்தாரர் தர்மலிங்கமும் மாலை 05.00 மணிக்கு சுத்தமல்லி EB அலுவலகத்திற்கு சென்றோம். மற்றவர்கள் வெளியில் நின்று கண்காணித்தார்கள். நான் EB அலுவலகத்தின் வரண்டாவில் நின்றுகொண்டிருந்தேன். புகார்தாரர் தர்மலிங்கம் EB அலுவலகத்திற்குள்ளே சென்றார். அப்போது போர்மேன் சரவணன் அலுவலகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். தர்மலிங்கம் உள்ளே சென்றவுடன் நான் கேட்ட 10,000/– பணம் கொண்டுவந்திருக்கிறீர்களா என்று சரவணன் புகார்தாரர் தர்மலிங்கத்திடம் கேட்டார். அதற்கு தர்மலிங்கம் கொண்டுவந்திருக்கிறேன் சார் என்று சொன்னார். பிறகு சரவணன் வெளியே வந்து யாருக்கோ போன் செய்தார். போன் செய்து முடித்து தர்மலிங்கத்திடம் அந்த 10,000/– பணத்தை கொடு என்று சரவணன் கேட்டார். தர்மலிங்கம் தனது இடது மேற்சட்டை பையிலிருந்த 10,000/– பணத்தை எடுத்து சரவணனிடம் கொடுத்தார். சரவணன் தனது வலது கையால் அந்த பணத்தை

வாங்கி இரண்டு கைகளாலும் எண்ணி பார்த்தார். எண்ணி பார்த்துவிட்டு சரவணன் அவர் போட்டிருந்த ஜீன்ஸ் பேண்ட்டின் வலது மேல் பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். நான் வரண்டாவில் நின்று மேற்கண்ட நிகழ்வுகளை கவனித்துக்கொண்டிருந்தேன். பிறகு நானும், தர்மலிங்கமும் அங்கிருந்து வெளியே வந்தோம். தர்மலிங்கம் தனது வலது கையால் தலையை சொறிந்து DSP க்கு சமிக்ஞை காட்டினார். DSP யும் விஜிலென்ஸ் குழுவினரும் உடனே வந்தார்கள். பின்னர் என்ன நடந்தது என்று எங்களிடம் விசாரித்தார்கள். நாங்கள் நடந்த விவரங்களை சொன்னோம். நானும், புகார்தாரர் தர்மலிங்கமும் DSP யையும் மற்றவர்களையும் அழைத்துகொண்டு உள்ளே போய் சரவணனை அடையாளம் காட்டினோம். DSP சார் சரவணனிடம் நாங்கள் விஜிலென்ஸ் டீமிலிருந்து வந்திருப்பதாக சொல்லி அறிமுகம் செய்து அடையாளப்படுத்திக்கொண்டார்கள். சரவணன் ரொம்ப பயந்துவிட்டார். DSP சார் சரவணனை சமாதானப்படுத்தி அமர வைத்தார். அவரிடம் விசாரணை செய்தார்.

**<u>தொடர்ச்சி ஒத்திவைக்கபடுகிறது.</u>**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.